வருகின்ற 2020-ம் ஆண்டு டிசம்பர் மாதம்14-ம் தேதி திங்கட் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னிலை: திரு.க.கதிர்வேல் பி.இ.,
தனி அலுவலர் (ம) ஆணையாளர்(பொ)
பவானி நகராட்சி

1. பவானி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சிறப்பு சாலைகள் திட்டம் (SRP) 2020-21 கீழ் ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் சாலை பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மன்றத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக அனுமதி வழங்கும் பொருட்டு மன்றத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20557/2020/இ3, நாள்:11.12.2020 ஆம் தேதியிட்ட கடிதத்தில், தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்து வரப்பெற்றுள்ளது.

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.கோடியில்) | சிறப்பு சாலைகள் திட்ட நிதி ( ரூ.கோடியில்) | நகராட்சி பங்களிப்பு ( ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| பவானி | 1.00 | 0.90 | 0.10 |

மேற்படி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும், கீழ்க்காணும் பணியினை மேற்படி நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளவும் இப்பணிக்கு நிர்வாக அனுமதி பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்பி வைக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | சாலையின் அகலம் (மீ) | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில் ) |
|---|---|---|---|---|
| 1 | Providing and Restoration of Bitumen road and Cement Concrete road at Chokkaramman Nagar, Anna Nagar (Mayura complex ),Gurunathan road,Anthiyur road,Devaraj pillai lane,Sivagnam lane,Thiruneelagander street, Makkan street, and Cauvery street in ward No. 1,3,5,8,14,15,24 and 27 | 1.58 | 4.00 | 100.00 |

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (கோப்பு எண்.1359/2020/இ1)

2. பவானி நகராட்சி வார்டு எண்.26 பழைய பேருந்து நிலையத்தில் உயர்மட்ட பேருந்து கூடம் அமைத்தல் பணி, மதிப்பீடு ரூ.25.00 இலட்சம் பணிக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், 2020-21 -ல கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் , மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ஈரோடு மாவட்டம் ஈரோடு அவர்களின் கடித ந.க.எண். 2483/2020/அ3, நாள்: 19.09.2020-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணியை மேற்கொள்ள மண்பரிசோதனை மற்றும் வடிவமைப்பு செய்ய அரசு பொறியியல் கல்லூரி கருப்பூர் , சேலம் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில் இதற்குண்டான தொகை ரூ.60180/- கேட்பு கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட பணியை மேற்கொள்ள மண்பரிசோதனை செய்ய சேலம் அரசு கல்லூரியிலிருந்து பவானி வர மண்பரிசோதனைக்கு தேவையான கருவிகளை எடுத்த வர நான்கு சக்கர மினி வேன் மற்றும் கல்லூரி அலுவலர்கள் வந்து செல்ல ஒரு கார் ஆகிய இரண்டு வாகனங்களை வாடகைக்கு எடுத்து வரப்பட்டு மண்பரிசோதனை பணி செய்து முடிக்கப்பட்டது.

அதற்குண்டான பட்டியல் மொத்தம் ரூ.6000/- வரப்பெற்றுள்ளது.

எனவே மேற்கண்ட மொத்த செலவுத் தொகை ரூ.66180/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுலக குறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. பொது நிதியில் செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. தொகை ரூ.60180/- ஐ The Principal Govt College of Engineering Salem, Payable at Omalur என்ற பெயரில் DD எடுத்து அனுப்பவும் மன்றம் அனுமதிக்கலாம்.
4. தொகை ரூ.6000/-த்தை இளநிலை பொறியாளர் அவர்களுக்கு வண்டி வாடகைக்கு செலவு செய்யப்பட்ட வகையில் தொகையை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1181/2020/இ1)

3. 2018-19 ஆம் ஆண்டு வருவாய் மற்றும் மூலதன நிதி தணிக்கை அறிக்கை பத்தி எண். 15-ல் புதிய பேருந்து நிலையத்தில் தொலைக்காட்சிப் பெட்டி வைத்து விளம்பரம் செய்யும் உரிமம் குத்தகைதாரர் 2018-19-ம் ஆண்டுக்கான குத்தகை தொகைக்கு உரிய GST ரூ.31500/- செலுத்தவில்லை எனவும் அத்தொகையை வசூலிக்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தொலைக்காட்சியில் பெட்டி வைத்து விளம்பரம் செய்யும் உரிமம் ஏலம் எடுத்த திரு.சிங்காரவேலன் என்பவர் இறந்து விட்டார். அவரது பெயரில் கீழ்கண்ட விபரப்படி காலம் கடந்த வைப்புத் தொகை உள்ளது.

| காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேடு | பக்கம் எண். | வரிசை எண். | தொகை ரூ. |
|---|---|---|---|
| VOL II | 287 | 24 | 19620/- |
| VOL III | 209 | 30 | 20870/- |
| ரூ. | | மொத்தம் | 40490/- |

மேற்கண்ட தொகையில் ரூ.31500/-ஐ மட்டும் GST க்காக சரிக்கட்ட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1707/2017/அ2)

**இடம்: பவானி**

**நாள்: 14.12.2020**

**(ஒம்) திரு.க.கதிர்வேல்**
**ஆணையாளர் (பொ) /தனி அலுவலர்**
**பவானி நகராட்சி**

வருகின்ற 2020-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வியாழக் கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பவானி நகராட்சி அலுவலகத்தில் நகர்மன்றத்தின் சாதாரணக் கூட்டம் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் பொருட்கள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**முன்னிலை: திரு.க.கதிர்வேல் பி.இ.,**
**தனி அலுவலர் (ம) ஆணையாளர்(பொ)**
**பவானி நகராட்சி**

1. ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் டிசம்பர் - 2020-ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

2. பவானி நகராட்சி குப்பை கிடங்கில் உள்ள பழைய குப்பைகளை (Legacy waste) துாய்மை இந்தியா திட்டம் 2018-19 திடக்கழிவு மேலாண்மை பணியில் ரூ.221.00 இலட்சம் மதிப்பீட்டில் Bio mining முறையில் குப்பைகளை அப்புறப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளது. இப்பணியில் தரை மட்டத்திற்கு மேல் அளவீடு செய்யப்பட்டதின் அடிப்படையில் 33556 கன.மீட்டர் அளவிலான பழைய குப்பைகளை அப்புறப்படுத்தப்பட்டுள்ளது.

சென்னை அண்ணா பல்கலைக்கழக சுற்றுச்சூழல் ஆய்வுகளுக்கான மைய (Centre for Environmental Studies) இயக்குனர் அவர்களின் கடிதம் ந.க.எண்.0128/DIR/CES/CMA/2020-21 நாள்: 21.12.2020-ன் கடிதத்தின் அறிவுரைகளின் படி, தரை மட்டத்திற்கு கீழ் (Below Ground Level) உள்ள பழைய குப்பைகளை (Legacy Waste) அளவீடு செய்யப்பட்டதில் 9300 கன.மீட்டர் என அளவிடப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20452/2020/LA3, நாள்:10.11.2020 ன்படி 15 வது மத்திய நிதிக்குழு நிதி ஒதுக்கீடு மானியத் தொகையாக ரூ.50,69,756/- வரப்பெற்றுள்ளது.

குப்பை கிடங்கில் தரை மட்டத்திற்கு கீழ் உள்ள பழைய குப்பைகளை அகற்ற வேண்டியுள்ளதால் நகராட்சி பொது நிதி நிலை பற்றாக்குறையாக உள்ளதால் 15 வது மத்திய நிதிக்குழு மானியத் தொகையில் முதல் பகுதியாக 6200 கன.மீட்டர் குப்பைகளை Bio Mining முறையில் அப்புறப்படுத்த மதிப்பீடு ரூ.50.00 இலட்சத்திற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 3100 கன.மீட்டர் பழைய குப்பைகளை அடுத்த கட்டமாக நகராட்சி பொது நிதிநிலைக்கேற்ப செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே வரப்பெற்றுள்ள 15 வது மத்திய நிதிக்குழு மானியத் தொகையினை இப்பணிக்கு பயன்படுத்தி பணியினை மேற்கொள்ள ரூ.50.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்க கோரி விரிவான திட்ட அறிக்கையினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களுக்கு சமர்பிக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.557/2018/இ1)

3. மண்டல இயக்குநர், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம், திருப்பூர்-2 அவர்களின் கடித ந.க.எண்.2825/2020/பி1, நாள்: 22.12.2020 ம் தேதிய கடிதத்தில் திருப்பூர் மண்டல இயக்குநரகத்தில் பயன்படுத்தப்பட்டு வந்த பேட்டரிகள் பழுதுபட்டுள்ளதனால் பவானி நகராட்சி பொது நிதியில் செலவுத் தொகை ரூ.70,000/- த்தில் 5எண்கள் ( 100 AH திறனில் ) வாங்கி தருமாறு கடிதத்தின் வாயிலாக கேட்டுள்ளார்கள். எனவே வாங்கி கொடுக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியில் செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1677/2020/இ1)

4. சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2018-19 -ல் வார்டு எண். 11 தேவபுரம் பகுதியில் பழுதடைந்த அங்கன்வாடி மைய கட்டிடத்தை இடித்து புதிய

அங்கன்வாடி மைய கட்டிடம் அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.8.70 இலட்சத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஈரோடு அவர்களின் கடித ந.க.எண்.1888/2018/அ3, நாள்: 27.11.2020 -ல் அனுமதி அளித்துள்ளதின் பேரில் 09.12.2020 அன்று குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1. | திரு.எம்.அப்புசாமி | 0.05% மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திருவாளர் ஆர்.என்.& கோ | 0.45% மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.05% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.அப்புசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.009/2019/இ1)

5. பவானி நகராட்சியின் நவீன ஆடுவதை கூடத்திற்கு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறையினரால் வழங்கப்பட்ட உரிமத்தின் காலம் 08.12.2020 ஆம் தேதியுடன் முடிவடைந்து உள்ளதால் மேற்படி துறையினரின் மூலம் ரூ.2000/- புதுப்பித்தல் கட்டணம் செலுத்தி உரிமம் புதுப்பித்து தொடர்ந்து செயல்பட ஏதுவாக ரூ.2000/- புதுப்பித்தல் கட்டணம் Online மூலம் துப்புரவு அலுவலர் செலுத்தி உரிமம் புதுப்பித்து பெற்று சமர்பித்து உள்ளார். எனவே துப்புரவு அலுவலரால் செலுத்தப்பட்டுள்ள தொகையினை திரும்ப வழங்க கேட்டு விண்ணப்பம் அளித்துள்ளதை ஏற்று ஆன்லைன் செலுத்தியுள்ள தொகை ரூ.2000/- ஐ துப்புரவு அலுவலருக்கு திரும்ப வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.437/2016//எச்1)

6. இந்நகராட்சியின் மூலம் மேற்கொள்ளப்படும் கொசுக்களை கட்டுப்படுத்தும் பணிக்கு உபயோகப்படும் புகைத் தெளிப்பான் மிஷின்கள் புதியதாக வாங்கி பயன்படுத்தி கொள்ளவும் அதற்காகும் செலவினத்திற்கும் ஏற்கனவே மன்றம் ஒப்புதல் வழங்கியுள்ளதால் இப்பணிக்கு கடந்த 30.12.2020 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரரின் விபரம் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | எம்/எஸ்.அபெக்ஸ் மார்க்கெட்டிங் 22/பி, ஆகாஸ் பில்டிங் வித்யா நகர், திண்டல், ஈரோடு. | 1.Portable Thermal Fogging Machine ( Outdoor) -1-க்கு ரூ.64400/-<br>2.Handy Fogging machine (Indoor) 1க்கு ரூ.14560/-<br>3. LPG Cylinder ரூ.253/- ( for Fogging Machine ) |
| 2. | M/s MSP pest control services, 45, 2வது மாடி சேந்தன் கந்தன் காம்ளக்ஸ், கோபிசெட்டிபாளையம் | 1. Portable Thermal fogging machine (Out door) 1க்கு ரூ.63840/-<br>2. Handy fogging machine (Indoor) 1-க்கு ரூ.14336/-<br>3. LPG Cylinder ( for Fogging Machine) 1-க்கு ரூ. 247/- |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண் 2-ல் கண்டுள்ள M/s MSP pest control services, Gobi அவர்களின் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மற்றொன்றை விட குறைவாக உள்ளதால் அதனை மன்றம் ஏற்று வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் ஒப்புதல் வழங்கலாம் (ந.க.எண்.1463/2020/எச்1)

7. இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மை பணிகள், கோவிட்-19, கொசுக்களின் மூலம் பரவும் டெங்கு, மலேரியா, யானைக்கால் நோய் போன்ற இதர தொற்று நோய்கள் குறித்த பணிகள் நடைபெற்று வருகிறது. இதுகுறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி திடக்கழிவு மேலாண்மை பணியினை செம்மையாக செய்வதற்கும் நோய்த்தடுப்பு நடவடிக்கைளை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கும் விழிப்புணர்வு நோட்டீஸ்கள் மற்றும் ஸ்டிக்கர்கள் தேவைப்படுகிறது.

**அதன் விபரம் பின்வருமாறு:**

| **வ.எண்** | **விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள்/நோட்டீஸ்களின் விபரம்** | **தேவைப்படும் பிரதிகளின் எண்ணிக்கை** |
|---|---|---|
| 1 | கொரோனா விழிப்புணர்வு சமூக இடைவெளி அவசியம் குறித்த ஸ்டிக்கர் | 11000 |
| 2 | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மட்கும் மற்றும் மட்காத கழிவுகள் குறித்த விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள். | 11000 |
| 3 | டெங்கு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு நோட்டீஸ் | 11000 |

மேற்குறிப்பிட்ட தேவையின் அடிப்படையில் விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் மற்றும் நோட்டீஸ்களை அச்சடித்து கொள்முதல் செய்து, மக்களிடையே விநியோகம் செய்து சிறந்தமுறையில் விழிப்புணர்வு சார்ந்த நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளை நல்லமுறையில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மேற்காணும் பணிக்காகும் செலவினம் ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1669/2020/எச்1)

8. பவானி நகராட்சியில் உள்ள 27 வார்டு பகுதிகளிலும் டெங்கு மற்றும் கொசுக்களால் பரவும் நோய்களை கட்டுப்படுத்திட அபேட் மருந்து தெளித்தல், கொசுப்புழுக்களை அழித்தல் மற்றும் புகை மருந்து தெளித்தல் போன்ற பணிகளுக்கு தினமும் 35 பணியாளர்களை (DBC Workers) நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள வெளிப்பணி ஒப்படைப்பு முறையில்

ஒப்பந்தப்புள்ளி கோரி M/s Trustus Outsourcing Solutions Pvt Ltd, Chennai அவர்களுக்கு உத்திரவு வழங்கப்பட்டு நோய் தடுப்பு பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் பணியின் ஒப்பந்தகாலம் எதிர்வரும் 08.01.2021ஆம் தேதியுடன் முடிவடையும் நிலையில் M/s Trustus Outsourcing Solutions Pvt, Ltd, Chennai அவர்களின் 27.12.2020-ஆம் தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக ஒப்பந்த காலத்திற்கு பின்பு அதே ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதமான நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு ரூ.533/- விலைவிகிதத்தில் (EPF and ESI உட்பட) தொடர்ந்து பணியாளர்களை வழங்கி பணி மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து கடிதம் வழங்கியுள்ளார்.

எனவே, நகரின் பொது சுகாதார நலன் கருதியும், நோய் தடுப்பு பணிகளின் அவசியம் கருதியும், மேற்படி ஒப்பந்த காலத்தினை 09.01.2021ஆம் தேதி முதல் 28.02.2021 ஆம் தேதிவரை ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு வரும் ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தில் M/s Trustus Outsourcing Solutions Pvt Ltd, Chennai அவர்களிடமிருந்து பணியாளர்களை பெற்று பணி மேற்கொள்ள ஏதுவாக ஒப்பந்தகாலத்தினை நீட்டிப்பு செய்து கொள்வதற்கும், அதற்காகும் செலவினம் ரூ. 7.50 இலட்சத்திற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 274/2020/எச்1)

9. பொறியியல் பிரிவு குடிநீர் பராமரிப்பு பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் இரண்டு பணியாளர்கள் ஏற்பாடு செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.0.80/- இலட்சத்திற்கு நகர்மன்ற தீர்மான எண். 216 நாள்:30.11.2020 அனுமதி அளித்துள்ளதன் பேரில் 16.12.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் அதிகம் / குறைவு |
|---|---|---|
| 1 | திரு.எம்.அப்புசாமி ஒப்பந்ததாரர் | 0.23% மதிப்பீட்டு விகிதத்தை விட குறைவு |
| 2 | திருவாளர் ஆர். என்&கோ ஒப்பந்ததாரர் | 5.63% மதிப்பீட்டு விகிதத்தை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:

1. வரப்பெற்ற இரண்து ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விகிதத்தை விட 0.23% சதவிகிதம் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.அப்புசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்காலம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண்.1405/2020/இ1)

10. பவானி நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் 2016-17 ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டம் பணிகள் சம்பந்தமாக நான்காம் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தமிழ் தினசரி நாளிதழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழ் ஆகியவற்றில் விளம்பரம் செய்ய இயக்குநர், தமிழ் வளர்ச்சி(ம)செய்தி (விளம்பரம்)த்துறை அவர்களின் வெளியீட்டு ஆணை எண். 3665/ஒப்பந்தப்புள்ளி/விளம்பரம் /2017 நாள்: 23.08.2017 ன்படி கோல்டன் அட்வர்டைசிங் & பப்ளிசிட்டி,சென்னை அவர்களால் விளம்பரம் செய்யப்பட்ட பட்டியல் தொகை ரூ.18850/- க்கான தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1240/2016/இ1)

11. பவானி நகராட்சி , உள்ளூர்திட்டக்குழுமம் , கட்டிட அனுமதி தற்போது மின்னஞ்சல் மூலம், நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் அவர்களின் அலுவலக AUTO D.C.R மென்பொருள் மூலம் கட்டிட விண்ணப்பங்களை ஒருங்கிணைந்த கட்டிட விதிகள் 2019-ன் படி பரிசீலிக்கப்பட்டு கூர்ந்தாய்வு அறிக்கை பெறப்பட்ட பின்னர் உத்தேச வரைபடம் , மேற்கண்ட கட்டிடவிதிகள் மற்றும், முழுமைத்திட்ட விதிகளின் படியும் ,எந்த ஒரு விதியும் பாதிப்பு இல்லை என்ற விபர அறிக்கை பெறப்பட்டு அதன் அடிப்படையில் கட்டிட அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 04.02.2019 மற்றும் அதில் கண்டுள்ள ஒருங்கினைந்த கட்டிட விதிகள் 2019-ன் படியும், நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் , ஈரோடு அவர்களின் 20.12.2020 அன்று நேரில் தெரிவிக்கப்பட்ட விபரங்களின்படியும் நகராட்சிப்பகுதியில் கட்டிடஅனுமதி வழங்க தொடர் கட்டுமான பகுதியின் விபரங்களை (CONTISIOUS BUILDING AREA) நிலையில் உள்ளவாறு ஆய்வு செய்து அதன் விபரத்தினை சர்வே எண் விபரங்களுடன் நகர வரைப்படத்தில் முழுமை திட்ட விபரங்களுடன் அளிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது

மேற்கண்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குனர், ஈரோடு அவர்கள் மூலம் தெரிவிக்கப்பட்டதின்படி தொடர் கட்டுமான பகுதி விபரங்களை முழுமைத்திட்ட உபயோகத்தில் உள்ளவாறு அதன் சர்வே எண் விபரங்களையும் , தொடர் கட்டுமான பகுதியின் தெருக்களின் விபரம் மற்றும் நகராட்சி வார்டுகளின் விபரங்களையும் கீழ்கண்டவாறு வகைபடுத்தப்பட்டுள்ளது.

**BHAVANI MUNICIPALITY**

**CONTINUOUS BUILDING AREA**

**Village Name : Bhavani Village**

**Continuous Building Area Survey Nos .**

**From Metter Road Municipal boundary junction (near court ) to Anthiyur corner**

758Part, 759Part,760Part,761Part,771part,770part,762Part,763Part,764,765,766,767,768,769,

**Commercial Area**

758 part ,761part,771 part,770part ,769,768,765,

**From Anthiyur road corner to Cauvery road Sangameshwarar temple**

764Part,768,769,770,771,847part, 849, 848Part

**Commercial Area**

847 part, 848part, 849 part

**From Kooduthurai To Anthiyur Road Junction**

838,825,824Part,822,422Part,792Part,793Part,802Part,807Part,

812Part,820,821,823,819,818, 815,814,817,813part ,816part

**Commercial Area**

848,833part, 824part, 838part, 823part, 825part, 813part, 814part

**Form Anthiyur Road To Sengadu Municipal limit**

784,782,783,775,774,776,777,752part

**Commercial Area**

795part,796part,797part,783part

**Anthiyur Road Kamarajnagar municipal limit**

784part,775,783,776,774part,757part,756,754,755,753

**Commercial Area**

771part,775part, 784part, 774 part ,757part, 846 part

**Form Anthiyur Road Junction To Kadayampatti privu Municipal limit**

811, 812part ,792part, 793part, 802 part, 807 part, 422 part, 425part,

824part, 799part, 798part ,797part

**Commercial Area**

792part,793part,802part,807part,813part,816part,812part,432part

425part,824part,

| வார்டு எண். | தொடர் கட்டுமான பகுதி அடங்கிய தெருக்களின் விபரம் |
|---|---|
| 1 | 1. சொக்கராயன் காடு பகுதி |
| | 2. திருவள்ளுவர் நகர் |
| 2 | 1. காமராஜ் நகர் முதல் வீதி |
| | 2.வர்ணபுரம் 5வது வீதி (அண்ணா நகர் ) |
| | 3. மெயின் ரோடு |
| 3 | காமராஜ் நகர் முதல் வீதி |
| 4 | 1.காமராஜ் நகர், பெருமாள் புரம் |
| | 2.மெயின் ரோடு |
| | 3.வர்ணபுரம் 5வது வீதி (அண்ணா நகர்) |
| | 4. வர்ணபுரம் 5வது ரோடு |
| 5 | வர்ணபுரம் 5வது வீதி (அண்ணா நகர்) |
| 6 | 1. சொக்கராயன் காடு |
| | 2. மீனாட்சி கல்யாண மண்டபம் ரோடு |
| 7 | 1. திருவள்ளுவர் நகர் |
| | 2. திருவள்ளுவர் நகர் எக்ஸ்டன்சன் பகுதி |
| 8 | 1. அந்தியூர் ரோடு |
| | 2. சோமசுந்தரபுரம் |
| 9 | 1.வர்ணபுரம் 5வது ரோடு |
| | 2.மீனாட்சி கல்யாண மண்டபம் ரோடு |
| 10 | 1. வர்ணபுரம் முதல் வீதி, |

| | |
|---|---|
| | 2. குருநாதன் ரோடு |
| 11 | 1.வர்ணபுரம் 2வது ரோடு |
| | 2.வர்ணபுரம் 3வது ரோடு |
| | 3.வர்ணபுரம் 4வது ரோடு |
| 12 | 1.தேவபுரம் |
| | 2. மெயின் ரோடு |
| 13 | 1. பழனிபுரம் 2வது ரோடு |
| | 2. பழனிபுரம் 3வது ரோடு |
| | 3. பழனிபுரம் 4வது ரோடு |
| | 4. பழனிபுரம் 5வது ரோடு |
| | 5.பழனிபுரம் 6வது ரோடு |
| | 6. பழனிபுரம் 7வது ரோடு |
| 14 | 1. பாவடி வீதி |
| | 2. பழனியாண்டவர் கோவில் வீதி, |
| | 4. பழனிபுரம் முதல் வீதி |
| 15 | 1. நந்தனார் வீதி |
| | 2.மகாத்மா காந்தி ரோடு |
| | 3.வாரச்சந்தை ரோடு |
| | 4.மெயின் ரோடு |
| | 5.தானா சாவடி சந்து |
| 16 | 1. திருநீலகண்டர் வீதி |
| | 2. தேவராஜன் சந்து |
| | 3. சிவஞானம் சந்து |
| | 4. பழனியாண்டவர் கோவில் வீதி |
| | 5.மண்தொழிலாளர் 3வது ரோடு |
| 17 | 1. மண்தொழிலாளர் 2வது சந்து |
| | 2. மண்தொழிலாளர் 2வது ரோடு |
| | 3. மண்தொழிலாளர் 3வது ரோடு |
| 18 | 1. மண்தொழிலாளர் 1வது சந்து |
| | 2.மண்தொழிலாளர் 1வது ரோடு |
| 19 | 1. காவேரி வீதி |
| | 2. பஜனை கோவில் வீதி |
| | 3. பழனியாண்டவர் கோவில் வீதி |
| | 4. மேற்கு கன்னார வீதி |
| | 5. மெயின் ரோடு |
| | 6. கிழக்கு கன்னார வீதி |
| 20 | 1. பசுவேஸ்வரர் வீதி |
| 21 | 1. காவேரி வீதி |
| | 2. தந்தை பெரியார் வீதி |
| | 3. கீரைக்கார வீதி |
| | 4. கீரைக்கார வீதி |
| | 5. மெயின் ரோடு |

| | |
|---|---|
| 22 | 1. ராயல் தியேட்டர் ரோடு |
| | 2.பஸ்ஸ்டேண்ட் ரோடு |
| | 3. மக்கான் வீதி |
| 23 | 1. சீனிவாசபுரம் 2வது ரோடு |
| | 2.சீனிவாசபுரம் கால்நடை மருத்துவமணை ரோடு |
| | 3. பழைய பஞ்சாயத்து ஆபிஸ் ரோடு |
| | 4. ஜோதி விநாயகர் கோவில் வீதி |
| | 5. மாரியம்மன் கோவில் வீதி |
| | 6. பழனியாண்டவர் கோவில் வீதி |
| 24 | 1. கல்தொழிலாளர் முதல் ரோடு |
| | 2. கல்தொழிலாளர் 2வது ரோடு |
| | 3. பழைய பஞ்சாயத்து ஆபிஸ் ரோடு |
| 25 | 1. கல்தொழிலாளர் 3வது ரோடு |
| | 2. ராயல் தியேட்டர் 2வது ரோடு |
| 26 | 1. ராயல் தியேட்டர் 2வது ரோடு |
| | 2. சீனிவாசபுரம் எக்ஸ்டன்சன் ரோடு |
| | 3. பழைய பஞ்சாயத்து ஆபிஸ் ரோடு |
| 27 | 1.காவேரி வீதி |
| | 2.மெயின் ரோடு |
| | 3.பாலக்கரை வீதி |
| | 4.பூக்கடை வீதி |

எனவே இந்நகராட்சியில் உள்ள 27 வார்டுகளின் தொடர் கட்டுமான பகுதிகள் அமைந்துள்ள தெருக்களின் விபரம் மற்றும் மேற்கண்ட தொடர் கட்டுமானங்கள் அமைந்துள்ள சர்வே எண். விபரங்களை தொடர் கட்டுமான பகுதியாக அங்கீகாரம் செய்து உரிய உத்திரவு வழங்க கோரி நகர் ஊரமைப்புத் துறை துணை இயக்குநர், ஈரோடு அவர்களுக்கு அனுப்ப நகர்மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.626/2017/எப்1)

12. பவானி நகராட்சி , உள்ளூர்திட்டக்குழுமம் , கட்டிட அனுமதி தற்போது மின்னஞ்சல் மூலம் , நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் அவர்களின் அலுவலக AUTO D.C.R மென்பொருள் மூலம் கட்டிட விண்ணப்பங்களை ஒருங்கிணைந்த கட்டிட விதிகள் 2019-ன் படி பரிசீலிக்கப்பட்டு கூர்ந்தாய்வு அறிக்கை பெறப்பட்ட பின்னர் உத்தேச வரைபடம் , மேற்கண்ட கட்டிடவிதிகள் மற்றும், முழுமைத்திட்ட விதிகளின் படியும் ,எந்த ஒரு விதியும் பாதிப்பு இல்லை என்ற விபர அறிக்கை பெறப்பட்டு அதன் அடிப்படையில் கட்டிட அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட ஒருங்கிணைந்த கட்டிட விதிகள் 2019-ன் படியும், நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் , ஈரோடு அவர்களின் 20.12.2020 அன்று நேரில் தெரிவிக்கப்பட்ட விபரங்களின்படியும் நகராட்சிப்பகுதியில் கட்டிடஅனுமதி வழங்க தொடர் கட்டுமான பகுதியின் விபரங்களை ( CONTISIOUS BUILDING AREA ) நிலையில் உள்ளவாறு ஆய்வு செய்து அதன் விபரத்தினை சர்வே எண் விபரங்களுடன் நகர வரைப்படத்தில் முழுமை திட்ட விபரங்களுடன் அளிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அவர்கள் மூலம் தெரிவிக்கப்பட்டபடி நகர வரைபடத்தில் நகராட்சிப்பகுதியில் உள்ள தொடர் கட்டுமான பகுதி விபரங்களை முழுமைத்திட்ட உபயோகத்தில் உள்ளவாறு அதன் சர்வே எண் விபரங்களுடன் வரைபடம் தயார் செய்தும் மற்றும் நகர வரைபடத்தில் நிலையில் உள்ளவாறு தொடர் கட்டுமான பகுதி விபரங்களை முழு விபரங்களுடன் வரை படம் தயார் செய்து முழுமைத்திட்ட வரைபடம் 5 எண்ணிக்கையும், நகர வரைபடம் 5 எண்ணிக்கையும், தொடர்கட்டுமான பகுதி சர்வே எண் விபரங்களுடன் அளிக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

எனவே மேற்கண்ட விபரங்களை தொடர் கட்டுமான பகுதி முழுமைத்திட்டத்தின் படி உள்ள பயன்பாடுகள் மற்றும் , தற்போது நிலையில் உள்ளவாறு விபரத்தினை நகர வரைபடத்தில் சர்வே எண் விபரங்களுடன் தேவையான எண்ணிக்கை தயார் செய்யவும் , அதனை (CADD DRAWING ) வரைபடம் தயார் செய்யவும் CD - யில் Copy செய்து வழங்குவதற்காக ஆகும் செலவினம் ரூ 25,000/- க்கும் மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி தனியார் விலைப்புள்ளி பெற்று மேற்கண்ட பணியினை செய்யப்பட்டமைக்கும் இந்நகர் மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.626/2017/எப்1)

13. அ) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்:19775/ஜெ2/2019, நாள்: 15.12.2020 இன் படி பவானி நகராட்சி பகுதிகளில் செயல்படும் முடிதிருத்தகம் அழகு நிலையம், ஸ்பா, மசாஜ் நிலையம் நடத்துபவர்கள் தமிழ்நாடு நகராட்சிய சட்டங்கள் (ஐந்தாவது திருத்தம்) சட்டத்தினால் (தமிழ்நாடு சட்டம் 40/2018) திருத்தம் செய்யப்பட்ட அட்டவணை V-ல் உள்ள உட்பிரிவு (jj) மற்றும் (jjj)-ல் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களுக்காக 1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் V/1920) பிரிவு 249-ன் படி தவறாமல் உரிமம் பெற்று தொழில் நடத்திட வேண்டும் என்பது சட்ட பூர்வமானது எனவும், உரிமம் பெற்று தொழில் நடத்த வேண்டும் என்பது குறித்து தினசரி தமிழ், ஆங்கில நாளிதழ்களில் அறிவிப்பு விளம்பரம் செய்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இப்பொருள் குறித்து தினசரி தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் விளம்பரம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ஆ) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் மற்றும் Gazatte Copies நகல்கள் மற்றும் தொழில் உரிமம் பெறுவதற்கான மாதிரி விண்ணப்ப படிவம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.1639/2020/எச்1)

14. பவானி நகராட்சி வார்டு எண் 24, மக்கான்வீதி பகுதியில் மக்கள் அதிகமாக பயன்படுத்தப்படும் சாலையில் ஏற்கனவே அமைந்துள்ள மூன்று மின்கம்பத்தில் புதிய தெரு விளக்குகள் மூன்று அமைத்து தெருவிளக்கு வசதி அமைத்துக் கொடுக்க நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.1664/2020/இ1)

15. ஆதிதிராவிடர்/பழங்குடியினர், மதம் மாறிய கிறிஸ்துவ ஆதிதிராவிடர் குடும்பங்களில் ஏற்படும் இறப்புகளுக்கும், இறந்தவர்களின் ஈமகிரியை செய்வதற்காக இறந்தவரின் குடும்பத்திற்கு தற்பொழுது ரூ.2,500/- மானியம் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசாணை (நிலை) எண்: 105, நாள்:19.10.2020-ல் தற்பொழுது வழங்கப்பட்டு வரும் மானியத்தொகை ரூ.2500/- யினை 2020-21 ஆம் ஆண்டு முதல் ரூ.5,000/-

ஆக உயர்த்தி வழங்கிட உத்திரவிடப்பட்டுள்ளது. எனவே, பவானி நகராட்சி பகுதியில் மேற்குறிப்பிட்டுள்ள குடும்பங்களில் ஏற்படும் இறப்புகளுக்கு 2020-2021 ஆம் நிதியாண்டு முதல் தலா ரூ.5,000/- வீதம் ஈமச்சடங்கிற்காக மானியம் வழங்கிட ஏதுவாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசாணை (நிலை) எண்: 105, நாள்: 19.10.2020 மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.1824/2018/எச்1)

16. இந்நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கடை எண்.6 ன் உரிமைதாரர் திரு.ஆர். அருள் என்பவர் 2019-2020 -ம் ஆண்டு குத்தகை செலுத்த வேண்டிய தொகை ரூ.21000/- வரிவிதிப்பு எண். 055/78046 க்கு காலங்கடந்த வைப்பு தொகையில் இருந்து வரவு எடுத்துக் கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: அனுமதி வழங்கலாம் (ந.க.எண்.0538/2020/அ2)

17. பவானி நகராட்சியின் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பவானியினை திடக்கழிவு மேலாண்மை விதிகளின் செயலாக்கங்களின் அடிப்படையில் Garbage free city மூன்று நட்சத்திர அங்கீகாரம் பெற சுய உறுதிமொமி சான்றும் அளித்துள்ளதற்கும் இந்நகராட்சியினை SBM திட்டத்தின் கீழ் ODF + சான்றிதழ் புதுப்பித்தலுக்கு பொதுமக்கள் ஆட்சேபனைகள் கருத்துருக்கள் பெறுவதற்கு 03.11.2020 -ல் தினமணியில் செய்தி வெளியிடப்பட்டதற்கு உரிய தொகை ரூ.4413/- ஐ வழங்க கோரி சத்யா ஏஜென்சீஸ் 73, N.G.G.O காலணி ஈரோடு அவர்களிடமிருந்து பட்டியல் வரப்பட்டுள்ளது.

மேலும் முடிதிருத்தம் / அழகு நிலையம்/ ஸ்பா / மசாஜ் நிலையம் நடத்துவோர்கள் நகராட்சியில் உரிமம் பெற்று தொழில் மேற்கொள்ள வேண்டும் எனவும் இதற்குரிய ஆலோசனைகள் கருத்துக்களை தெரிவிக்க 25.12.2020 ஆம் தேதியன்று The daily thanthi மற்றும் The New Indian Express நாளிதழ்களில் செய்தி வெளியிடப்பட்டது. The daily Thanthi செய்தி நாளிதழ் செய்தி வெளியிடப்பட்டுள்ளதற்குரிய தொகை ரூ.2648 /- சத்யா ஏஜென்சீஸ் 73, N.G.G.O காலணி ஈரோடு அவர்களுக்கு வழங்கவும், The News Indian Express –ல் செய்தி வெளியிடபட்டமைக்கு உரிய தொகை ரூ.50614/-ஐ M/s Sky. Pds பெரியார் நகர், ஆந்திராவங்கி அருகில் ஈரோடு நிறுவனத்தினருக்கு வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.359/2020/எச்1)

18. பவானி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை பாரத திட்டம் மூலம் இந்நகராட்சியினை “திறந்த வெளி கழிப்பிடம் இல்லாத நகராட்சி” (ODF +) சான்றிதழ் புதுப்பித்து சான்று பெறுவதற்கும், Garbage Free Cities மூன்று நட்சத்திர அந்தஸ்து சான்று பெறுவதற்கும், Swachh Survekshan-2021-ன் கீழ் தரமதிப்பீடு செய்வதற்கும், பொதுமக்களிடையே திடக்கழிவு மேலாண்மை மற்றும் கழிப்பிடங்களை பயன்படுத்துதல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திட, Flex போர்டுகள் தயார் செய்து பொருத்த வேண்டி உள்ளது. இதற்காகும் உத்தேச செலவினம் ரூ.25,000/-ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.359/2017/எச்1)

19. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண். 3199/2020/சி1, நாள்: 13.11.2020 -ல் பவானி நகராட்சி ஆணையாளர் பொறுப்பினை நகராட்சி பொறியாளர் திரு.க.கதிர்வேல் அவர்கள் வகிக்குமாறு உத்திரவிடப்பட்டுள்ளது. அதன்படி நகராட்சி பொறியாளர் திரு.க.கதிர்வேல் பவானி நகராட்சி ஆணையாளர் பொறுப்பினை 13.11.2020 முற்பகல் முதல் கூடுதலாக கவனித்து வருகிறார். எனவே அரசாணை எண்.153 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை நாள்: 05.12.2017 ன்படி உரிய விதிமுறைகளின்படி திரு.கதிர்வேல் நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் பொறுப்பு அவர்களுக்கு கூடுதல் பொறுப்பு படி வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. செலவுத் தொகையினை வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1430/2020/சி1)

20. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இந்நகராட்சியினை Garnbage Free City யாக அங்கீகரித்து தர மதிப்பீடு செய்து ரேங்க் வழங்கிட ஏதுவாக இந்நகராட்சியில் மேற்கொள்ளப்படும் Door to Door collection with segrecation முதல் செயலாக்கம்(Processing) செய்யும் பணிகள் வரை கண்காணிப்பு செய்ய இதற்கென புதியதாக ஒரு App உருவாக்கி GIS முறையில் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது.

எனவே, Information Technology தொழில் நுட்பங்களை செயல்படுத்தும் நிறுவனங்கள் மூலம் App Develop செய்து SWM பணிகள் அனைத்தையும் வுசயஉமைபெ செய்து கண்காணித்து சிறப்பாக திடக்கழிவு மேலாண்மை சார்ந்த சேவை பணிகளை பொது மக்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

இப்பணியினை இந்நகராட்சியில் பல்வேறு கட்டங்களாக படி படியாக(Step By Step) செயல் படுத்தி பணிமேற்கொள்ளவும் அதற்கு முதல் கட்டமாக ஆகும் உத்தேச தொகை ரூபாய் 3.00 இலட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.359/2020/எச்1)

21. பவானி நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் பழைய திட்டத்தின் Clariflourlator -ன் Rubber Wheel மற்றும் புதிய திட்டத்தின் flax mixer gear box ஆகியவைகள் பழுதுபட்டுள்ளது. இதனை உடனடியாக பழுது நீக்கம் செய்ய வேண்டியுள்ளது. இதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 75000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. குடிநீர் நிதியிலிருந்து செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1528/2020/இ1)

22.பவானி நகராட்சி அலுவலகத்தில் உள்ள Inverter மற்றும் Battery கள் பழுதுபட்டு இயங்காமல் உள்ளது. இதனால் மின்தடை நேரங்களில் அலுவலக பணிகள் மேற்கொள்ள மிகவும் சிரமமாக உள்ளது. இதனால் புதியதாக Inverter மற்றும் Battery கள் பொருத்த வேண்டியுள்ளது. மற்றும் சோலார் பேனலுக்கு ஒரு Volt Controller புதியதாக பொருத்த வேண்டியுள்ளது. மேற்கண்ட வேலைகள் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.85000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியில் செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1572/2020/இ1)

23. பவானி நகராட்சி புதிய பேருந்து நிலையம் அம்மா உணவகம் அருகில் உள்ள மின்கம்பத்தில் உள்ள T5 96 watts பிட்டிங்குகள் பழுதுபட்டுள்ளது. இதனை மாற்ற வேண்டியுள்ளது. மின்சார சேமிப்பு செய்யும் பொருட்டு LED லைட் பிட்டிங்ஸ் 90 watts -ல் 4 எண்கள் பொருத்த தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.35000/- க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியில் செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1589/2020/இ1)

24. பவானி நகராட்சிக்கு உட்பட்ட கீழ்கண்ட பள்ளிகளில் பழுது பணிகள் பார்க்க வேண்டியுள்ளது. அதன்படி மதிப்பீடு ரூ.12.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. வார்டு எண்.2 காமராஜ்நகர் நகராட்சி நடுநிலைப்பள்ளி மற்றும் வார்டு எண்.5 வர்ணபுரம் நகராட்சி நடுநிலைப்பள்ளி | மதிப்பீடு - ரூ.4.50 இலட்சம் |
| 2. வார்டு எண். 10, பழனிபுரம் நகராட்சி வடக்கு துவக்கப்பள்ளி மற்றும் வார்டு எண்.13 பசுவேஸ்வரர் நகராட்சி துவக்கப்பள்ளி | மதிப்பீடு - ரூ.4.50 இலட்சம் |
| 3. வார்டு எண். 27 காவேரி வீதி கிழக்கு நடுநிலைப்பள்ளி | மதிப்பீடு - ரூ.300 இலட்சம் |

மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட பணிகளை கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.1590/2020/இ1)

25. பவானி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணியில் உரக்கிடங்கில் உள்ள திடக்கழிவுகளை நவீன முறையில் எரித்து அப்புறப்படுத்துவதற்கான இயந்திரம் ( No Wast Incinerator Machine) நிறுவ " ஒளிரும் ஈரோடு பவுண்டேஷன்" நிறுவனத்தார் அவர்கள் மேற்கொண்டு வருகிறார்கள் இப்பணிக்கு Shelder machine conveyor ஆகியவைகளுக்கு மேடை அமைத்தல் மற்றும் இவைகளுக்கு மேற்கூரை அமைத்தல் மற்றும் தண்ணீர் தொட்டி கட்டுதல் ஆகிய பணிகள் செய்ய வேண்டியுள்ளது. மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.5.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியில் மேற்கண்ட பணியை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1625/2020/இ1)

26. கோவிட்-19 பொது ஊரடங்கு காலத்தில் 01.04.2020 முதல் 31.05.2020 வரை உள்ள காலத்திற்கு உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படாத நகராட்சி கடைகள் மற்றும் வரியில்லா இனங்களுக்கு வாடகை தொகையினை செலுத்துவதிலிருந்து குத்தகைதாரர்களுக்கு விளக்கு அளிக்கப்பட்டது தொடர்பாக. அரசாணை (ப) எண்.298 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி-4) துறை நாள்:02.09.2020 -ல் ஆணையிடப்பட்டதை தொடர்ந்து, மேற்படி அரசாணையினை மன்றம் தனது தீர்மானம் நாள்: 30.09.2020-ன்படி பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, இவ்வலுவலக கடித ந.க.எண்.480/2019/அ2 நாள்: 26.09.2020-ன்படி 01.04.2020 முதல் 31.05.2020 வரை செயல்படாத கீழ்கண்ட பட்டியலில் உள்ள நகராட்சி கடைகள் மற்றும் வரியில்லா இனங்களின் வாடகை தொகையினை (GST உட்பட) இரண்டு மாதங்களுக்கு தள்ளுபடி செய்யலாம் என உரிய அலுவலர்கள் குழுவினால் உறுதி செய்து அறிக்கை பெறப்பட்டுள்ளது.

| வ .எண் | வரிவிதிப்பு எண் | குத்தகை இனங்கள் வரியாக (கடைகள்/வாரச்சந்தை/கட்டணகழிப்பிடங்கள் /பேருந்து நுழைவு கட்டணம்/தினசரி சந்தை /சைக்கிள் /வாகனம் நிறுத்தங்கள் மற்றும் இதர இனங்கள் வாரியாக | ஏப்ரல் 2020 | | மே 2020 | | மொத்தம் (01.04.2020 முதல் 31.05.2020 வரை) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மாத வாடகை | GST | மாத வாடகை | GST | மாத வாடகை | GST |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | 055/14 | எஸ்.மலர்விழி - புதிய பேருந்து நிலையம் கடை எண்.14 | 10925 | 1967 | 10925 | 1967 | 21850 | 3933 |
| 2 | 055/30 | பி.பழனிசாமி - புதிய பேருந்து நிலையம் கடை எண்.1 | 17204 | 3064 | 17204 | 3064 | 34408 | 6129 |
| 3 | 055/31 | பி. குப்புசாமி - புதிய பேருந்து நிலையம் கடை எண்.2 | 10925 | 1967 | 10925 | 1967 | 21850 | 3933 |
| 4 | 055/34 | பி பரமசிவம் - புதிய பேருந்து நிலையம் கடை எண்.5 | 10925 | 1967 | 10925 | 1967 | 21850 | 3933 |
| 5 | 055/35 | எஸ்.கார்த்திகேயன் - புதிய பேருந்து நிலையம் கடை எண்.6 | 10925 | 1967 | 10925 | 1967 | 21850 | 3933 |
| 6 | 055/36 | எஸ்.கார்த்திகேயன் -- புதிய பேருந்து நிலையம் கடை எண்.7 | 10925 | 1967 | 10925 | 1967 | 21850 | 3933 |
| 7 | 055/37 | ஏ.சுப்ரமணியம் - புதிய பேருந்து நிலையம் கடை எண்.8 | 10925 | 1967 | 10925 | 1967 | 21850 | 3933 |
| 8 | 055/47 | கே.சிவக்குமார் - புதிய பேருந்து நிலையம் கடை எண்.16 | 4025 | 725 | 4025 | 725 | 8050 | 1449 |
| 9 | 055/56033 | டி. ஜெயந்தி - புதிய பேருந்து நிலையம் கடை எண்.4 | 10925 | 1967 | 10925 | 1967 | 21850 | 3933 |
| 10 | 055/56052 | சி. சரஸ்வதி - புதிய பேருந்து நிலையம் கடை எண்.21 | 7130 | 1283 | 7130 | 1283 | 14260 | 2567 |
| 11 | 055/56058 | பி. லீலாவதி - புதிய பேருந்து நிலையம் கடை எண்.27 | 8625 | 1553 | 8625 | 1553 | 17250 | 3105 |
| 12 | 055/57 | எம். கௌரி -புதிய பேருந்து நிலையம் கடை எண்.26 | 8625 | 1553 | 8625 | 1553 | 17250 | 3105 |
| 13 | 055/61 | எஸ். ஞானசௌந்தரம் புதிய பேருந்து நிலையம் கடை எண்.30 | 9315 | 1677 | 9315 | 1677 | 18630 | 3353 |
| 14 | 055/62 | ஜி.கற்பகம் க/பெ. ஜான சுந்தரம் புதிய பேருந்து நிலையம் கடை எண்.31 | 10235 | 1842 | 10235 | 1842 | 20470 | 3685 |
| 15 | 055/63 | ஜே.கோபிநாத் த/பெ. ஜெயராமன் ,புதிய பேருந்து நிலையம் -அசைவ உணவு விடுதி | 13225 | 2381 | 13225 | 2381 | 26450 | 4761 |
| 16 | 055/71 | தமிழ்நாடு போக்குவரத்து கழகம் பதிவு அலுவலகம் , புதிய பேருந்துநிலையம் | 1234 | 222 | 1234 | 222 | 2468 | 444 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 17 | 055/78031 | ஆர்.வசந்தா புதிய பேருந்து நிலையம் - உணவு விடுதி | 12765 | 2298 | 12765 | 2298 | 25530 | 4595 |
| 18 | 055/78032 | குருநாதன் - புதிய பேருந்து நிலையம் கடை எண்.17 | 4025 | 725 | 4025 | 725 | 8050 | 1449 |
| 19 | 055/78036 | ஜான்சன், புதிய பேருந்து நிலையம் கடை எண்.28 | 8625 | 1553 | 8625 | 1553 | 17250 | 3105 |
| 20 | 055/78037 | பி.தங்கராஜ் - புதிய பேருந்து நிலையம் கடை எண்.20 | 3680 | 662 | 3680 | 662 | 7360 | 1325 |
| 21 | 055/78038 | ஆர். ரங்கசாமி -புதிய பேருந்து நிலையம் கடை எண்.29 | 8625 | 1553 | 8625 | 1553 | 17250 | 3105 |
| 22 | 055/79016 | அன்னை பவானி - புதிய பேருந்து நிலையம் கடை எண்.40 | 2053 | 370 | 2053 | 370 | 4106 | 739 |
| 23 | 055/80 | நிர்வாக இயக்குநர், ஆவின் | 3105 | 559 | 3105 | 559 | 6210 | 1118 |
| 24 | 055/87 | ஜே.பாக்கியம் க/பெ. ஜெயராமன் - புதிய பேருந்து நிலைய கடை | 4500 | 810 | 4500 | 810 | 9000 | 1620 |
| 25 | 055/88 | எம்.ரவிச்சந்திரன் - புதிய பேருந்து நிலைய கடை | 4500 | 810 | 4500 | 810 | 9000 | 1620 |
| 26 | 055/89 | சி.செல்வம் த/பெ. சின்னு படையாச்சி - புதிய பேருந்து நிலைய கடை | 4500 | 810 | 4500 | 810 | 9000 | 1620 |
| 27 | 055/90 | திருமதி - ஆர். வசந்தா க/பெ. ராஜமாணிக்கம் புதிய பேருந்து நிலைய கடை | 4500 | 810 | 4500 | 810 | 9000 | 1620 |
| 28 | 055/92 | என்.எஸ். மணி த/பெ. செங்கோட கவுண்டர் - புதிய பேருந்து நிலைய கடை | 4500 | 810 | 4500 | 810 | 9000 | 1620 |
| 29 | 055/93 | திருமதி. புஷ்பா க/பெ. மாணிக்கம் புதிய பேருந்து நிலைய கடை | 4500 | 810 | 4500 | 810 | 9000 | 1620 |
| 30 | 055/94 | ஏ. பழனியப்பன் த/பெ.அப்பாச்சி கவுண்டர் - புதிய பேருந்து நிலைய கடை | 4500 | 810 | 4500 | 810 | 9000 | 1620 |
| 31 | 055/BD01/ 00012 | ஆர்.பாரதி - புதிய பேருந்து நிலையம் கடை எண். 18 | 4100 | 738 | 4100 | 738 | 8200 | 1476 |
| 32 | 055/BD01/ 00015 | ஜி.நித்யபிரியா புதிய பேருந்து நிலையம் கடை எண். 15 | 4100 | 738 | 4100 | 738 | 8200 | 1476 |
| 33 | 055/78029 | ஏ.சிவக்குமார் - புதிய பேருந்துநிலையம் கடை எண். 3 | 10925 | 1967 | 10925 | 1967 | 21850 | 3933 |
| 34 | 055/56068 | வி. ஸ்ரீதர் - செல்லாண்டியம்மன் தினசரி மார்க்கெட் கடை எண். 2 | 4600 | 828 | 4600 | 828 | 9200 | 1656 |
| 35 | 055/64 | பி.எஸ். வரதராஜன் - செல்லாண்டியம்மன் தினசரி மார்க்கெட் கடை எண். 1 | 4600 | 828 | 4600 | 828 | 9200 | 1656 |
| 36 | 055/66 | பி.எம்.பழனியப்பன் - செல்லாண்டியம்மன் தினசரி மார்க்கெட் கடை எண். 3 | 4600 | 828 | 4600 | 828 | 9200 | 1656 |
| 37 | 055/67 | ஏ.சரஸ்வதி - செல்லாண்டியம்மன் தினசரி மார்க்கெட் கடை எண். 4 | 4600 | 828 | 4600 | 828 | 9200 | 1656 |
| 38 | 055/083 | பர்வதா - செல்லாண்டியம்மன் தினசரி மார்க்கெட் கடை எண். 4 | 1500 | 270 | 1500 | 270 | 3000 | 540 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 39 | 055/082 | ஆர்.உதயகுமாரி - செல்லாண்டியம்மன் மார்க்கெட் கடை | 1500 | 270 | 1500 | 270 | 3000 | 540 |
| 40 | 055/085 | எஸ். ராஜேஸ்வரி - செல்லாண்டியம்மன் தினசரி மார்க்கெட் கடை | 1500 | 270 | 1500 | 270 | 3000 | 540 |
| 41 | 055/086 | கே.ஈஸ்வரன் - செல்லாண்டியம்மன் தினசரி மார்க்கெட் கடை | 1500 | 270 | 1500 | 270 | 3000 | 540 |
| 42 | 055/78039 | கே.எஸ்.சீரங்கம் - பழைய பேருந்து நிலையம் கடைஎண். 1 | 1725 | 311 | 1725 | 311 | 3450 | 621 |
| 43 | 055/78040 | கே.எஸ்.சீரங்கம் - பழைய பேருந்து நிலையம் கடைஎண். 2 | 1725 | 311 | 1725 | 311 | 3450 | 621 |
| 44 | 055/78042 | ராஜமாணிக்கம் - பழைய பேருந்து நிலையம் கடை எண் . 8 | 1725 | 311 | 1725 | 311 | 3450 | 621 |
| 45 | 055/78043 | டி.ஸ்ரீதர் - பழைய பேருந்து நிலையம் கடை எண்.3 | 1725 | 311 | 1725 | 311 | 3450 | 621 |
| 46 | 055/78044 | டி.ஸ்ரீதர் - பழைய பேருந்து நிலையம் கடை எண்.4 | 1725 | 311 | 1725 | 311 | 3450 | 621 |
| 47 | 055/78045 | நேரு ராஜேந்திரகுமார் - பழைய பேருந்து நிலையம் கடை எண். 5 | 1725 | 311 | 1725 | 311 | 3450 | 621 |
| 48 | 055/78047 | பி.வி.ரங்கராஜீ - பழைய பேருந்து நிலையம் - கடை எண்.7 | 1725 | 311 | 1725 | 311 | 3450 | 621 |
| 49 | 055/78048 | ஜி.குருசாமி - பழைய பேருந்து நிலையம் - கடை எண்.9 | 1725 | 311 | 1725 | 311 | 3450 | 621 |
| 50 | 055/78049 | ஜி.குருசாமி - பழைய பேருந்து நிலையம் - கடை எண்.10 | 1725 | 311 | 1725 | 311 | 3450 | 621 |
| 51 | 055/78051 | ஆர். வெங்கடாச்சலம் - பழைய பேருந்து நிலையம் கடை எண். 12 | 1725 | 311 | 1725 | 311 | 3450 | 621 |
| 52 | 055/78052 | எஸ்.என். முனியப்பன் - பழைய பேருந்து நிலையம் கடை எண். 11 | 1725 | 311 | 1725 | 311 | 3450 | 621 |
| 53 | 055/BD01/ 00013 | சுரேஷ்குமார் - பழைய பேருந்து நிலையம் கடை எண். 14 | 1800 | 324 | 1800 | 324 | 3600 | 648 |
| 54 | 055/BD01/ 00017 | ஆர்.பி. பரணிதரன் - பழைய பேருந்து நிலையம் கடை எண். 13 | 1850 | 333 | 1850 | 333 | 3700 | 666 |
| 55 | 055/79007 | எம்.செல்வி - க/பெ. மோகன் - அந்தியூர் ரோடு - ஜங்சன் கடை எண். 1 | 7000 | 1260 | 7000 | 1260 | 14000 | 2520 |
| 56 | 055/79008 | செல்வகுமார் - அந்தியூர் ரோடு ஜங்சன் கடை எண். 1 | 7000 | 1260 | 7000 | 1260 | 14000 | 2520 |
| 57 | 055/79009 | திருமதி. மாலதி - அந்தியூர் ரோடு ஜங்சன் கடை எண். 1 | 7000 | 1260 | 7000 | 1260 | 14000 | 2520 |
| 58 | 055/79014 | கே.முருகன் த/பெ. கந்தசாமி - அந்தியூர் ரோடு ஜங்சன் கடை எண். 1 | 5687 | 1024 | 5687 | 1024 | 11374 | 2047 |
| 59 | 055/79010 | கே.மணியகாரன் - மீன் மார்கெட் வணிக வளாக கடை | 1725 | 311 | 1725 | 311 | 3450 | 621 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 60 | 055/79011 | என். ஜெயராமன் - மீன் மார்கெட் வணிக வளாக கடை | 1725 | 311 | 1725 | 311 | 3450 | 621 |
| 61 | 055/79012 | பி.வி. ரங்கராஜ் - மீன் மார்கெட் வணிக வளாக கடை | 1725 | 311 | 1725 | 311 | 3450 | 621 |
| 62 | 055/79013 | சம்பத்குமார் - மீன் மார்கெட் வணிக வளாக கடை எண் .6 | 1725 | 311 | 1725 | 311 | 3450 | 621 |
| 63 | 055/79019 | வனிதா க/பெ. இளங்கோவன் - மீன் மார்கெட் வணிக வளாக கடை எண்.3 | 1725 | 311 | 1725 | 311 | 3450 | 621 |
| 64 | 055/79020 | இளங்கோவன் த/பெ. புழனியப்பன் - மீன் மார்கெட் வணிக வளாக கடை எண். 4 | 1725 | 311 | 1725 | 311 | 3450 | 621 |
| 65 | 055/79021 | I. வெங்கடாச்சலம் - மேட்டூர் ரோடு வாட்டர் டேங்க் வணிக வளாக கடை | 1380 | 248 | 1380 | 248 | 2760 | 497 |
| 66 | 055/79022 | பாரதிராஜா - மேட்டூர் ரோடு வாட்டர் டேங்க் வணிக வளாக கடை | 1409 | 254 | 1409 | 254 | 2818 | 507 |
| 67 | 055/79023 | சி.மாதையன் - மேட்டூர் ரோடு வாட்டர் டேங்க் வணிக வளாக கடை | 1438 | 259 | 1438 | 259 | 2876 | 518 |
| 68 | 055/79024 | வரதராஜன் - மேட்டூர் ரோடு வாட்டர் டேங்க் வணிக வளாக கடை | 1438 | 259 | 1438 | 259 | 2876 | 518 |
| | | **TOTAL** | **339323** | **61078** | **339323** | **61078** | **678646** | **122156** |

| வ.எண் | வரிவிதிப்பு எண் | குத்தகை இனங்கள் வரரியாக (கடைகள்/வாரச்சந்தை/கட்டணகழிப்பிடங்கள் /பேரூந்து நுழைவு கட்டணம்/தினசரி சந்தை /சைக்கிள் /வாகனம் நிறுத்தங்கள் மற்றும் இதர இனங்கள் வாரியாக | **வருடாந்திர குத்தகை தொகை** | ஏப்ரல் 2020 | | மே 2020 | | மொத்தம் (01.04.2020 முதல் 31.05.2020 வரை) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | மாத குத்தகை தொகை | GST | மாத குத்தகை தொகை | GST | மாத குத்தகை தொகை | GST |
| 69 | 055/BD01 /00008 | கே.பாபு புதிய பேருந்து நிலையம் தகரப் பெட்டி கடை எண். 2 | **6891** | 574 | - | 574 | - - | 1149 | - |
| 70 | 055/BD01 /00009 | கே.எம். பழனிசாமி புதிய பேருந்து நிலையம் தகரப் பெட்டி கடை எண். 5 | **7332** | 611 | - | 611 | - | 1222 | - |
| 71 | 055/BD01 /00010 | எம். செல்லவேல் - புதிய பேருந்து நிலையம் தகரப் பெட்டி கடை எண். 3 | **7222** | 602 | - | 602 | - | 1204 | - |
| 72 | 055/BD01 /00002 | பிரகாஷ் - புதிய பேருந்து நிலையம் தகரப் பெட்டி கடை எண்.1 | **6836** | 570 | - | 570 | - | 1139 | - |
| 73 | 055/BDO1 /00014 | பாக்கியம் - புதிய பேருந்து நிலையம் பூக்கடை | **55677** | 4640 | - | 4640 | - | 9280 | - |
| 74 | 055/BD01 /00005 | ஐ. வெங்கடாச்சலம் - ஆடு அடிக்கும் தொட்டி | **51818** | 4318 | - | 4318 | - | 8636 | - |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 75 | 055/BD01 /00011 | வி.மாரியப்பன் - புதிய பேருந்துநிலையம் கட்டண கழிப்பிடம் | **277830** | 23152.5 | - | 23152.5 | - | 46305 | - |
| 76 | 055/BD01 /00007 | கே.சீரங்கன் - பழைய பேருந்து நிலையம் கட்டண கழிப்பிடம் | **156555** | 13046.5 | - | 13046.5 | - | 26093 | - |
| 77 | 055/BD01 /00016 | கே.ராஜசேகரன் - புதிய பேருந்து நிலையம் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம் | **525000** | 43750 | - | 43750 | - | 87500 | - |
| 78 | 055/BD01 /00003 | கே.முருகன் - செல்லியாண்டியம்மன் மார்க்கெட்இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் | **49613** | 4134.5 | - | 4134.5 | - | 8269 | - |
| 79 | 055/BD01 /00004 | டி.ராஜசேகர் - மீன் மார்கெட் நுழைவு கட்டண வசூல் | **1653750** | 137812.5 | - | 137812.5 | - | 275625 | - |
| 80 | 055/BD01 /00001 | கே.சிங்காரவேலன் - புதிய பேருந்து நிலையம் தொலைக்காட்சி பெட்டி விளம்பர கட்டணம் | **192938** | 16078 | - | 16078 | - | 32156 | - |
| | | TOTAL | | **249287** | **-** | **249287** | | 498574 | **-** |
| | | GRAND TOTAL | | **588612** | **61078** | **588612** | **61078** | **1177224** | **122156** |

தினசரி மார்கெட் குத்தகைதாரர் 2020-2021-ம் ஆண்டுக்குறிய குத்தகைத் தொகை முழுவதையும் செலுத்திவிட்டார் எனவே மேற்கண்ட பட்டியலில் வரிசை எண்.1 முதல் 80 வரையுள்ள குத்தகை இனங்களுக்கு ஏப்ரல் 2020 மற்றும் மே 2020 ஆகிய இரண்டு மாதங்களுக்கு மட்டும் வாடகை தொகையினை தள்ளுபடி செய்ய ஏதுவாக அம்மாதங்களுக்கான கேட்பினை கேட்பு பதிவேட்டில் UTIS வழியாக நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மேற்கண்டவாறு ஏப்ரல் 2020 மற்றும் மே 2020 ஆகிய இரண்டு மாதங்களுக்கு மட்டும் நகராட்சி குத்தகை இனங்களுக்கான கேட்புத் தொகையினை நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.480/2020/அ2)

27. பவானி நகராட்சி பொறியியல் பிரிவில் பல்வேறு திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. திட்டப்பணிகள் மேற்கொள்ள தொழில் நுட்ப அலுவலர்கள் இளநிலை பொறியாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகிய இருவர் மட்டுமே உள்ளனர். இவர்களின் உதவிக்கு பணி ஆய்வர் இந்நகராட்சியில் இல்லை. இதனால் திட்டப்பணிகளை விரைந்து முடிக்கவும், திட்டப்பணிகளை மேற்கொள்ள திட்ட பிரேரணைகளை தயாரித்து அனுப்புதலும் மிகவும் சிரமமாக உள்ளது. இதனால் ஒரு தொழில் நுட்ப உதவியாளர் தேவைப்படுகின்றது. எனவே மூன்று மாத காலத்திற்கு ஒரு தொழில் நுட்ப உதவியாளரை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தலாம் இதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.76000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது நிதியில் செலவை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1660/2020/இ1)

**இடம்: பவானி** **(ஒம்) திரு.க.கதிர்வேல்**

**நாள்: 31.12.2020** **ஆணையாளர் (பொ) /தனி அலுவலர்**

**பவானி நகராட்சி**